செ.வெ.எண்:675 **செய்தி வெளியீடு–18.8.2008**

**அரசு ஊழியர்களில் ஊனமுற்றவர்களுக்குச் சிறப்பு சலுகை!**

**பேருந்துகளில் நெரிசலின்றி பயணம் செய்வதற்கு வசதியாக மாலையில் 15 நிமிடங்களுக்கு முன்னதாக அலுவலகத்திலிருந்து புறப்பட்டுச் செல்ல அனுமதி!**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

தமிழக அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பார்வையற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் அனைவரும் அலுவலக நேரம் முடிந்து மாலையில் வீடு திரும்பும்போது கூட்ட நெரிசல் காரணமாக பேருந்துகளில் பயணம் செய்வதில் மிகுந்த இடர்ப்பாடுகளுக்கு ஆளாகின்றனர் என்பது தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து பார்வையற்ற மற்றும் உடல் ஊனமுற்ற அரசுப் பணியாளர்கள் பேருந்துகளில் நெரிசலின்றி ஏறிச் செல்வதற்கு வசதியாக, அவர்கள் தங்கள் அலுவலகப் பணி நேரம் முடிவதற்கு 15 நிமிடங்கள் முன்பாகவே அலுவலகத்திலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு அனுமதி வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை